1995 ஏப்ரல் 17]

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரில் பெண்களுக்கு சிறு தொழில் பயிற்சி மையம் துவங்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான் கேள்வி. இப்போது தொழில் முனைவோருக்கு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அங்கு தொழில் முனைவோர்கள் முன்வருவார்களே யானால், அதைப் பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்கள் 1993-94-வருடம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது சிட்கோ மூலமாக உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை செங்கம் தொகுதிக்கு அமைத்துத் தருவதாகச் சொன்னார்கள். அதனுடைய ஆய்த்தப் பணிக்காக மாவட்ட தொழில் மைய அதிகாரிகள் புதுப்பாளையம் ஒன்றியத்தில் பெரியகுளம், செங்கம் ஒன்றியத்தில் மண்மலை, மேல்புதூர் ஆகிய கிராமங்களைப் பார்வையிட்டார்கள். தொழில் தொடங்க வேண்டுமென்றால், அடிப்படை தேவைகளை தொழில் முனைவோருக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். உதாரணமாக இடம், காம்பவுண்டு சுவர், மின்சாரம், தண்ணீர் இவற்றையெல்லாம் நாம் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தொழில் முனைவோர்கள் மிக ஆர்வத்துடன் முன்வருவார்கள். இப்போது அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி விரிவான அறிக்கையை அரசு அதிகாரிகளிடம் நாம் கேட்டிருக்கிறோம். அது ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து அரசுக்கு அந்த விரிவான அறிக்கை வந்தவுடன் அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 309, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

309—

மலர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்தல்

***24857**-திரு. கா. பூ. முனுசாமி* :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

[1995 ஏப்ரல் 17

தருமபுரி மாவட்டத்தில் மலர்கள் நிறையப் பயிரிடப்படுவதால், மலர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்திட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டத்தில் மலர்கள் சாகுபடியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், காவேரிப்பட்டினம், மொரப்பூர், தொகுதிகளில் குண்டுமல்லி, மல்லி, சாமந்திப்பூ போன்ற பூக்களும், கிருஷ்ணகிரி, இராயக்கோட்டை, ஹோசூர், தேன்கனிக்கோட்டை போன்ற பகுதிகளில் சாமந்தி, ரோஜா போன்ற மலர்களை அதிக அளவில் பயிர் செய்கின்றார்கள். அந்தப் பயிர்களுக்குரிய விலை அங்கே கொடுக்கப்படாத காரணத்தால் பக்கத்து மாநிலமான பெங்களூருக்குச் செல்கின்ற போது விலை குறைத்து வாங்குகிறார்கள். எனவே விவசாயிகளுக்குரிய விலை கிடைக்கின்ற வகையில் மலர்களை அரசே விலைக்கு வாங்கி ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கை எடுத்து, சங்கம் அமைக்க மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 445 ஹெக்டேர் பரப்பளவில் மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இவைகளிலிருந்து மொத்தம் 2,225 மெட்ரிக் டன் மலர்கள் உற்பத்தியாகிறது. உற்பத்தியாகும் மலர்கள் பெரும்பாலும் பெங்களூர், சேலம், சென்னை ஆகிய பெருநகரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. சாகுபடி பரப்பளவு கூடுகின்ற பட்சத்தில், இதுபோன்ற பிரச்சினைகள் வரும் என்று விவசாயிகள் அரசுக்குத் தெரியப்படுத்தினால், அப்போது அரசு பரிசீலிக்கும்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூ வகைகள் காலை 6 மணிக்கு பெங்களூருக்குச் சென்றால், உதாரணத்திற்கு மல்லியை எடுத்துக்கொள்வோம். 6 மணிக்கு பெங்களூர் மார்கெட்டிற்குச் சென்றால், அதனுடைய விலை கிலோ ரூ. 80. அதே பூ ஒரு மணி நேரம் கழித்து 7 மணிக்குச் செல்கிறது என்றால் அந்தப் பூவினுடைய விலை ரூ. 25, 30-க்குத்தான் வாங்குகிறார்கள். ஒரு மணி வித்தியாசத்திலே ஒரு விவசாயிக்கு ஏற்படுகின்ற நஷ்டம் கிட்டத்தட்ட ரூ. 55, ரூ. 50. இப்படி ஒரு மணி நேர வித்தியாசத்தில் ஏற்படுகின்ற நஷ்டத்தைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தர்மபுரி மாவட்டத்தினுடைய

பொருளாதார வளர்ச்சிக்கு பல துறைகளிலும் மேம்பாடு செய்திருக்கின்ற இந்த நல்ல நிலையில், பூ விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையிலே காலையிலே பூக்களை எடுத்துச் செல்வதற்குரிய வாகனங்களை வாங்குவதற்கு விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் கடன் தொகையாவது வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. காலை நேரங்களிலே அங்காடிக்கு பூ உற்பத்தியாளர்கள் கொண்டுபோய் விற்பனை செய்கின்றபோது அதிக வியாபாரிகள் வருகின்றார்கள். அங்கே கொள்முதல் செய்யப்பட்ட பூக்களை அவர்கள் விரைந்து விற்பனை செய்யக்கூடிய இடங்களுக்கு எடுத்துச்செல்லவேண்டும். ஏனென்று சொன்னால் பூ என்பது அழுகும் பொருள். எனவேதான் காலை நேரங்களில் விலை அதிகம் கிடைக்கிறது. இரண்டு மணிநேரம் கழித்தால் விலை குறைகிறது. இதுபோன்ற காலதாமதம் ஏற்படுவது என்பது இந்தத் துறையில் ஒரு வழக்கமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களுடைய தோட்டங்களிலிருந்து அல்லது விளை நிலங்களிலிருந்து பெறக்கூடிய அந்த மலர்களை அதனுடைய தரம் குறையாமல், வாடாமல் கொண்டு வந்து நல்ல, அதிக விலை கிடைக்க கூடிய நகரங்களிலே விற்கவேண்டுமென்பதற்காக வாகன வசதி வேண்டுமென்ற முறையிலே ஆங்காங்கே இருக்கின்ற மலர் உற்பத்தியாளர்கள் அந்தச் சங்கங்களை நிறுவி, அந்தச் சங்கங்களின் மூலமாக ஒரு குளிர்பதன வசதி செய்யப்பட்ட வாகனம் வேண்டுமென்று கோரியதால் அதை வாங்க இருக்கிறோம். அதற்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று முறையாக விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு அரசாங்கம் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் தந்து புதிய குளிர்பதன வசதி செய்யப்பட்ட வாகனம் வாங்குவதற்கு வசதியை உருவாக்கித் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 310, திருமதி. பி. நிர்மலா, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

310—

திண்டுக்கல்லில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

* **35954**-திருமதி பி. நிர்மலா:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-